நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சீ

முக்கிய விடயங்கள் குறித்த ஆவணம்

வியாபார வங்கித் தொழில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

- பொது முக்கிய விடயங்கள்
- நீண்ட காலக் கடன்கள்
- குறுகிய காலக் கடன்கள்
- விநியோகிப்பாளர் நிதி வசதி
- பெறப்படத்தக்க நிதி வசதி
- காசோலை முகாமைத்துவச் சேவை
- NDB வழமையான நடைமுறைக் கணக்கு

Classification: Public

பொது முக்கிய விடயங்கள்

வைப்புக் காப்புறுதியின் காப்பு

நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சீ (NDB வங்கி) இற்கு வழங்கப்பட்ட வங்கித்தொழில் உரிமம் இலங்கை மத்திய வங்கியினால் இரத்துச் செய்யப்படுகின்ற பட்சத்தில், காலத்துக்குக் காலம் இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அதிகபட்ச தொகை வரை தகைமையுடைய வைப்பாளர்களுக்கு நட்டஈடளிப்பதற்கென, இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) வழங்கப்பட்ட நடைமுறையில் உள்ள பணிப்புக்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் படி இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் எல்லாத் தகைமைகொண்ட வைப்புக்களும் காப்புறுதிசெய்யப்படுகின்றன.

செயலற்ற/செயற்படாத மற்றும் கைவிடப்பட்ட கணக்குகள்

தொடர்ச்சியாக பன்னிரண்டு (12) மாத காலப்பகுதியொன்றிற்கு வாடிக்கையாளரினால் தொடக்கிவைக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் எவற்றையும் கொண்டிராத வெளிநாட்டு நாணய கணக்குகள் உட்பட ஏதேனும் நடைமுறை அல்லது சேமிப்புக் கணக்கு, "செயற்படாத கணக்கு" என NDB வங்கியினால் வகைப்படுத்தப்படும் என்பதுடன் தொடர்ச்சியாக இருபத்து நான்கு (24) மாத காலப்பகுதியொன்றிற்கு வாடிக்கையாளரினால் தொடக்கிவைக்கப்படும் கொடுக்கல்வாங்கல்கள் எவையும் மேற்கொள்ளப்படாவிடின் "செயலற்ற கணக்கு" என வகைப்படுத்தப்படும். கணக்கு வைத்திருப்பவர், "செயற்படாத கணக்கு" / "செயலற்ற கணக்கு" என வங்கியினால் வகைப்படுத்தப்பட்ட கணக்கொன்றைச் செயற்படுத்துவதற்கு தனது வங்கிக் கிளை முகாமையாளர் அல்லது தொடர்பு முகாமையாளரிடம் சென்று எழுத்திலான கோரிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பத்து (10) ஆண்டு காலப்பகுதியொன்றிற்கு வாடிக்கையாளரினால் தொடக்கிவைக்கப்பட்ட செயற்பாடு எதுவும் பதியப்பட்டிராத கணக்குகள் வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் கைவிடப்பட்ட ஆதனங்களாக விவரிக்கப்படுகின்றன; அவை பின்னர் காலத்துக்குக் காலம் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் பணிப்புக்களின் நியதிகளின் படி இலங்கை மத்திய வங்கிக்கு கைமாற்றப்படுகின்றன.

இலங்கை மத்திய வங்கிக்கு கைமாற்றப்பட்ட அத்தகைய கைவிடப்பட்ட ஆதனங்களை கணக்கு வைத்திருப்பவர் உரிமைகோருவதற்கு தேவைப்படுத்துகின்ற பட்சத்தில், அவர் தனது வங்கிக் கிளை முகாமையாளர் அல்லது தொடர்பு முகாமையாளரிடம் சென்று வங்கியின் நியமப் படிவத்தில் எழுத்திலான கோரிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

முறைப்பாட்டைக் கையாளும் நடைமுறை

வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளம் அல்லது வங்கியின் ஏதேனும் உத்தியோகபூர்வ வெளியீடு அல்லது அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டவாறு அதில் வழங்கப்பட்ட நடைமுறையின்படி மிக அண்மையில் உள்ள வங்கிக் கிளைக்கு அல்லது வங்கியின் அழைப்பு மையத்துக்கு அல்லது தலைமை அலுவலகத்துக்கு வாய்மொழிமூலமாக அல்லது எழுத்தில் வங்கிக்கு ஏதேனும் முறைப்பாட்டைச் செய்வதற்கான உரிமையை கணக்கு வைத்திருப்பவர் கொண்டிருத்தல் வேண்டும். முறைப்பாடொன்று தீர்க்கப்படாத பட்சத்தில், கணக்கு வைத்திருப்பவர் நிதி குறைகேள் அதிகாரியின் உதவியை நாடலாம் (இவ்வாவணத்தின் கடைசிப் பக்கத்தில் உள்ள விபரங்களின் படி)

தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாத்தல்

கடவுச் சொற்கள், PIN இலக்கங்கள் OTP முதலியன போன்ற தகவல்கள் வாடிக்கையாளரின் நிதிச் சொத்துக்களைப் பாதுகாப்பதில் முக்கியமானவைகளாகவுள்ளதால் எச்சூழ்நிலையின் கீழும் அம்முக்கியமான தகவல்களைப் பகிர்வதனை வாடிக்கையாளர்கள் தவிர்ந்துகொள்ளுதல் வேண்டும். வாடிக்கையாளர்கள், இம்முக்கியமான தகவல்களை மூன்றாம் தரப்பினர் அணுகுவதற்கு இயலச்செய்யக்கூடிய ஏதேனும் இடத்தில் அல்லது முறையில் PIN இலக்கங்கள், கடவுச் சொற்கள் பற்றிய ஏதேனும் எழுத்திலான பதிவைப் பேணுதல் ஆகாது. PIN இலக்கங்கள், கடவுச் சொற்கள், OTP கள் கைமாற்றப்படத்தக்கவை அல்ல என்பதுடன் இயைபான வாடிக்கையாளரின் பிரத்தியேக பயன்பாட்டுக்கு மட்டுமே ஆகும். வாடிக்கையாளர் அத்தகைய முக்கியமான தகவல்களை கண்டிப்பாக இரகசியமாக வைத்திருப்பதற்கு பொறுப்பாதல் வேண்டும்.

கணக்கை அணுகுவதற்கான கட்டுப்பாடு

அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்கின்றபட்சத்தில் வாடிக்கையாளர்கள் வகைகூறக்கூடியவர்களாக இருப்பதனாலும் சட்ட வலுவுறுத்தல் முகவராண்மைகளுடன் ஒத்துழைப்பதற்கு தேவைப்படுத்தப்படுவதனாலும் அவர்கள் தமது கணக்குகளைத் தொழிற்படுத்துவதற்கு மூன்றாம் தரப்பினரை அனுமதித்தலாகாது.

கணக்குகளை மூடுதல் மற்றும் தொடர்புடைய செலவுகள்

வங்கிக்கு எழுத்திலான முன்னறிவித்தலை வழங்குவதன் மூலம் தமது எவையேனும் கணக்குகளை மூடிவிடுவதற்கான விருப்பத்தெரிவை வாடிக்கையாளர்கள் கொண்டிருக்கின்றனர். எவ்வாறாயினும், எவையேனும் கணக்குகளை மூடிவிடுவதுடன் இணைந்த ஏற்புடையதான வங்கி விதிப்பனவுகள் இருக்கலாம் என்பதைக் கவனத்திற்கொள்வது முக்கியமாகும்.

வரிகளும் அறவீடுகளும்

பிடித்துவைத்தல் வரி, வருமான வரி, நிதிச் சேவைகளுக்கான VAT முதலியன உட்பட தற்போதைய எல்லா ஏற்புடையதான வரிகளும் அல்லது அறவீடுகளும் நடைமுறையில் உள்ள வரி மற்றும் வேறு இயைபான ஒழுங்குவிதிகளின்படி ஏற்புடையனவாதல் வேண்டும். FATCA இன் ஏற்பாடுகளினால் அல்லது வேறு நியாயாதிக்கத்தினால்(நியாயாதிக்கங்களினால்) விதிக்கப்பட்ட அல்லது விதிக்கப்படும் வேறு ஏதேனும் ஒழுங்குவிதியினால்/ஒழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்பட்டவாறு IRD இற்கு அல்லது வேறு ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைக்கு/அதிகாரசபைகளுக்கு செலுத்தப்படக்கூடிய எவையேனும் ஏற்புடையனவான வரிகளை அத்துடன்/அல்லது அறவீடுகளை குறைப்பதற்கு வங்கிக்கு அதிகாரமளிக்கப்படுகின்றது.

முக்கிய விடயங்கள் குறித்த ஆவணம் – நீண்ட காலக் கடன்கள்

விளைபொருள் / சேவை	சிறப்புக் கூறுகள்	கட்டணங்கள்/விதிப்பனவுகள், தரகுப்பணம்,வட்டி,	விளைபொருள் / சேவையைப் பெறுவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை	பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்
நீண்ட காலக் கடன்கள்	• கிடைக்கக்கூடிய தன்மையின் படி சலுகைரீதியான நிதியளிப்பு வழிகள் மற்றும் ஒன்றுதிரட்டப்பட்ட நிதிகளின் கீழான கடன்கள் • கடன் கொடுப்பனவுக் காலம் - கருத்திட்ட காலப்பகுதியின் அடிப்படையில் 2 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேல் • போட்டியுள்ள வட்டி வீதங்கள் • EMI அல்லது மீதியைக் குறைத்தலின் அடிப்படையில் கணக்கிடப்படும் தவணைக் கொடுப்பனவுகள். • கருத்திட்டத்தின் தன்மையைப் பொறுத்து சலுகைக் காலம் கிடைத்தல் • கருத்திட்டத்தின் பண ஓட்ட அடிப்படையிலான காலம்	• கட்டணங்கள் / விதிப்பனவுகள் - NDB இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட கட்டணங்களின் படி: https://www.ndbbank.com/downloads • கடனின் வகையைப் பொறுத்து நிலையான அல்லது வேறுபடத்தக்க வட்டி வீதத் தெரிவு	• வாடிக்கையாளருடனான ஆரம்பக் கலந்துரையாடல் • உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் • வியாபாரத்தின் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் • வழங்கப்பட்ட பிணைப்பொறுப்பு பற்றிய விபரங்கள் உட்பட நிதியளிப்பு மற்றும் ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் பற்றிய விபரங்களைச் சமர்ப்பித்தல் • வசதி முனைவுக் கடிதம் இயைபான அங்கீகரிக்கும் அதிகாரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் ஏற்புக்காக அனுப்பப்படும் • செலுத்தீடானது நியதி நிபந்தனைகளின் படி பிணைப்பொறுப்பு / சட்ட ஆவணங்கள் நிறைவேற்றப்படுவதன் மேல் செய்யப்படுதல் வேண்டும் • மீள்நிதியளிப்பு வீதங்கள் இயைபான அதிகாரிகளிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் பயனுறும்	• கொடுப்பனவுகள் மாதாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் • விசேட நிபந்தனைகள், முற்பயனுள்ள மற்றும் முன் செலுத்தீட்டு நிபந்தனைகளுக்கு அமைந்தொழுகுதல் • வங்கியினால் விதிக்கப்படும் பொதுவான நிபந்தனைகள் • வசதிகளானவை எல்லாத் தேவைப்படுத்தப்பட்ட ஆவணங்களையும் நிறைவு செய்வதற்கமையவும் வங்கியின் கடன் மதிப்பீட்டு அளவுகோல்களுக்கு இசையவும் வங்கியின் தனித் தற்றுணிபில் கிடைக்கக் கூடியதாக்கப்படும்

முக்கிய விடயங்கள் குறித்த ஆவணம் – குறுகிய காலக் கடன்கள்

விளைபொருள் / சேவை	சிறப்புக் கூறுகள்	கட்டணங்கள்/விதிப்பனவுகள், தரகுப்பணம்,வட்டி,	விளைபொருள் / சேவையைப் பெறுவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை	பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்
குறுகிய காலக் கடன்கள்	• கொடுப்பனவுக் காலப்பகுதி தொழிலின் தொழிற்பாட்டு மூலதன சுழற்சியில் தங்கியுள்ளது • சலுகைரீதியான வட்டி வீதங்கள்	• கட்டணங்கள்/விதிப்பனவுகள் - NDB இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட கட்டணங்களின் படி: https://www.ndbbank.com/downloads • வட்டி வீதம் – நிலையான அல்லது வேறுபடத்தக்க (சந்தை வீதங்களைப் பொறுத்து)	• வாடிக்கையாளருடனான ஆரம்பக் கலந்துரையாடல் • உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் • வியாபாரத்தின் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் • வழங்கப்பட்ட பிணைப்பொறுப்பு பற்றிய விபரங்கள் உட்பட நிதியளிப்பு மற்றும் ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் பற்றிய விபரங்களைச் சமர்ப்பித்தல் • வசதி முனைவுக் கடிதம் இயைபான அங்கீகரிக்கும் அதிகாரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் ஏற்புக்காக அனுப்பப்படும்	• வசதிகளானவை எல்லாத் தேவைப்படுத்தப்பட்ட ஆவணங்களையும் நிறைவு செய்வதற்கமையவும் நிலவுகின்ற வங்கியின் கடன் மதிப்பீட்டு அளவுகோல்களுக்கு இசையவும் வங்கியின் தனித் தற்றுணிபில் கிடைக்கக் கூடியதாக்கப்படும்

			• செலுத்தீடானது நியதி நிபந்தனைகளின்படி பிணைப்பொறுப்பு / சட்ட ஆவணங்கள் நிறைவேற்றப்படுவதன் மேல் செய்யப்படுதல் வேண்டும்	

முக்கிய விடயங்கள் குறித்த ஆவணம் – விநியோகிப்பாளர் நிதி வசதி

விளைபொருள் / சேவை	சிறப்புக் கூறுகள்	கட்டணங்கள்/விதிப்பனவுகள், தரகுப்பணம்,வட்டி,	விளைபொருள் / சேவையைப் பெறுவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை	பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்
விநியோகிப்பாளர் நிதி வசதி.	• NDB வங்கியின் சேர்த்துக்கொள்ளப்பட்ட பாரிய கூட்டாண்மை நிறுவன வாடிக்கையாளரின் விநியோகிப்புத் தொழிலில் ஈடுபடுகின்ற வாடிக்கையாளர்களுக்கான குறுகிய கால தொழிற்பாட்டு மூலதன தேவைப்பாடுகளை எதிர்கொள்ளல்.	• சந்தை வீதங்களுக்கு இசைய • வேறுபடத்தக்க அல்லது நிலையான வீதம் ஆகிய இரண்டும் வழங்கப்படமுடியும்	• வாடிக்கையாளருடனான கலந்துரையாடல் • ஆவணங்களை நிறைவுசெய்தல் • வங்கியினால் வியாபாரம் மதிப்பீடு செய்யப்படுதல் • வசதியின் கொடைமுனைவு மற்றும் ஏற்பு • வசதியைத் தொடங்குதல் • முதிர்வடைந்த GRN கள் வாங்குபவரிடமிருந்தான கொடுப்பனவு மூலம் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும்	• முனைவுக் கடிதத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு

முக்கிய விடயங்கள் குறித்த ஆவணம் – பெரிய அளவில் பெறப்படத்தக்க நிதி வசதி

விளைபொருள் / சேவை	சிறப்புக் கூறுகள்	கட்டணங்கள்/விதிப்பனவுகள், தரகுப்பணம்,வட்டி,	விளைபொருள் / சேவையைப் பெறுவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை	பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்
பெறப்படத்தக்க நிதி வசதி	• வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தகத்தின் மூலம் பெறப்படத்தக்கவைகளுக்கு நிதியளிப்பதன் மூலம் தமது தொழிற்பாட்டு மூலதன தேவைப்பாடுகளை எதிர்கொள்வதற்கு NDB வங்கியின் தற்போதைய மற்றும் எதிர்கால வாடிக்கையாளரை இயலச்செய்தல்.	• சந்தை வீதங்களுக்கு இசைய. • வேறுபடத்தக்க வீதங்கள் வழங்கப்படமுடியும்	• வாடிக்கையாளருடனான கலந்துரையாடல் • ஆவணங்களை நிறைவுசெய்தல் • வங்கியினால் வியாபாரம் மதிப்பீடு செய்யப்படுதல் • வசதியின் கொடைமுனைவு மற்றும் ஏற்பு • வசதியைத் தொடங்குதல் • முதிர்வடைந்த கடன்கள் பயனுறும் திகதியில் காசோலைகளை தீர்ப்பனவுசெய்வதன் மூலம் அறவிடப்படுதல் வேண்டும்	• முனைவுக் கடிதத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு

முக்கிய விடயங்கள் குறித்த ஆவணம் – காசோலை முகாமைத்துவச் சேவைகள்

விளைபொருள் / சேவை	சிறப்புக் கூறுகள்	கட்டணங்கள்/விதிப்பனவுகள், தரகுப்பணம்,வட்டி,	விளைபொருள் / சேவையைப் பெறுவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை	பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்
காசோலை முகாமைத்துவச் சேவை	• பெரிய அளவிலான காசேலைத் தொகுதிகளை முகாமை செய்தல்	தொகுதியின் அடிப்படையில் – காசோலை இதழ் ஒன்றிற்கு 25 இ.ரூ. நிலையான கட்டணம் அல்லது காசோலையின் பெறுமதியின் 0.1% ஏற்புடையதாகும்	• வாடிக்கையாளருடனான கலந்துரையாடல் • ஆவணங்களை நிறைவுசெய்தல் • வசதியின் கொடைமுனைவு மற்றும் ஏற்பு • காசோலைகளை பாதுகாப்பாக வைத்திருத்தல்	• முனைவுக் கடிதத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு

முக்கிய விடயங்கள் குறித்த ஆவணம் – NDB நடைமுறைக் கணக்கு

விளைபொருள் / சேவை	எவையேனும் ஊக்கத் தொகைகள் மற்றும் மேம்பாடுகள் உட்பட நிதிசார் மற்றும் வேறு நன்மைகள்	கட்டணங்கள்/விதிப்பனவுகள் , தரகுப்பணம்,வட்டி,	விளைபொருள் / சேவையைப் பெறுவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை	பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்
NDB வழமையான நடைமுறைக் கணக்கு	• NEOS மொபைல் பேங்கிங், இணைய வங்கித்தொழில் வசதி மற்றும் இலத்திரனியல் வங்கிக் கூற்று வசதிக்கான தகைமை • நிலையியற் கட்டளை வசதிக்கான தகைமை • ஸ்வீப் இன்/ ஸ்வீப் அவுட் வசதிகளுக்கான தகைமை • நாடளாவியரீதியில் உள்ள வங்கிக் கிளை வலையமைப்பு மூலமும் தெரிவுசெய்யப்பட்ட வங்கிக் கிளைகளின் நீடிக்கப்பட்ட வங்கி நேரங்களின் மூலமும் வசதியான முறையிலான பண வைப்புக்கள்/ மீளப்பெறல்கள் / நிதிப் பரிமாற்றங்கள். • விசா இயலுமாக்கப்பட்ட டெபிட் அட்டை மூலம் உமது கணக்கை 24 மணித்தியாலமும் உலகளாவிய ரீதியில் அணுகுதல் • சராசரி மீதிகளைப் பேணுவதன் மூலம் வியாபார வங்கித்தொழில் பிரிவு நன்மைகளை அனுபவிப்பதற்கான தகைமை. மேலதிகத் தகவல்களுக்கு https://bit.ly/4cO5Ywb என்னும் இணைப்பைப் பார்வையிடவும்	விரிவான மற்றும் சமீபத்திய கட்டணங்களுக்கும் குறைந்தபட்ச மீதித் தேவைப்பாடுகளுக்கும் NDB வங்கியின் இணையத் தளத்தில் உள்ள கட்டண சிற்றேட்டைப் பார்வையிடவும்: https://www.ndbbank.com/downloads	• வங்கிக் கிளை முகாமையாளரினாலான தனிப்பட்டரீதியிலான நேர்காணல். • பொறுப்பாணையை நிறைவுசெய்தல். • அறிமுகம் (ஏற்கனவே நடைமுறைக் கணக்கு வைத்திருப்பவர் ஒருவரிடமிருந்து). • KYC தேவைப்பாடு (உமது வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள்) • செல்லுபடியான தேசிய அடையாள அட்டையின் (NIC) பிரதி மற்றும் NIC இல்லாத பட்சத்தில், NIC இலக்கத்தைக்கொண்ட சாரதி அனுமதிப்பத்திரம்/ கடவுச் சீட்டின் பிரதி. • முகவரி பற்றிய எண்பிப்பு (தேவைப்படின்)	• 18 வயதுக்கு மேற்பட்ட இலங்கையில் வதிவுள்ளவர்கள். • ஆரம்ப வைப்பு மற்றும் குறைந்தபட்ச சராசரி மீதித் தொகைக்கு NDB வங்கி இணையத்தளத்தில் உள்ள கட்டண சிற்றேட்டைப் பார்வையிடவும். • முக்கிய விடயங்கள் குறித்த ஆவணத்துக்கும் விளைபொருளின் இயையான நியதி நிபந்தனைகளுக்கும் இடையில் ஒவ்வாமை ஏற்படுகின்ற பட்சத்தில், முக்கிய விடயங்கள் குறித்த ஆவணம் மேலோங்குதல் வேண்டும்.

உமது பின்னூட்டங்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

எமது சேவைகளை எல்லா நேரங்களிலும் நீங்கள் திருப்திப்படும் வகையில் வழங்குவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.
உமது எதிர்பார்ப்புக்களை நாம் எவ்வளவு சிறப்பாக பூர்த்தி செய்கின்றோம் என்பதை அறியவும் அவசியமாகின்றவிடத்து சீராக்கல்களைச் செய்வதற்கும் உமது பின்னூட்டம் எமக்கு உதவிபுரியும்.

உமது பின்னூட்டங்களை எவ்வாறு பகிர்ந்து கொள்வது:

உமது வங்கிக் கிளை முகாமையாளரை (வங்கிக் கிளை தொடர்பு விபரங்கள்) அல்லது உமது தொடர்பு முகாமையாளரை நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

+94 (0) 11 2448888/ +94(0)117448888 என்ற இலக்கத்தினூடாக 24 மணி நேர அழைப்பு மையத்தைத் தொடர்புகொள்ளவும்.

எமது மின்னஞ்சல் முகவரி: contact@ndbbank.com

வாடிக்கையாளர் அனுபவ அலுவலர், நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சீ, இல.92, பர்னாட் சொய்சா மாவத்தை, கொழும்பு 05 என்ற முகவரிக்கு எழுதவும்.

நாம் எவ்வாறு பதிலளிப்போம்:

முறைப்பாடொன்றைப் பெறுவதன் மேல், வங்கியின் முறைப்பாட்டைக் கண்காணிக்கும் முறைமையில் பதிவுசெய்து அது பற்றிய விடயத்தை உடனடியாகத் தீர்ப்பதற்கு முயற்சி செய்வோம். எம்மால் அவ்வாறு செய்ய இயலாமலிருக்கின்ற பட்சத்தில், மூன்று வேலை நாட்களினுள் தீர்வொன்றை நாம் உமக்கு வழங்குவோம். முறைப்பாட்டின் தன்மை காரணமாக, இக்காலப் பிரிவினுள் எம்மால் தீர்க்க முடியாவிடின், உத்தேச பதிலளிப்பு நேரமொன்றை நாம் உமக்குத் தெரிவிப்போம்.

நீங்கள் முன்மொழிந்த குற்றச்சாட்டு தொடர்பாக நாங்கள் அளித்த பதில் தொடர்பில் நீங்கள் முழுமையாக திருப்தியடையவில்லை என்றால்,
நீங்கள் இலங்கை நிதி ஒம்பியூட்ஸ்மன் அலுவலகத்தை அல்லது இலங்கை மத்திய வங்கியின் நிதி நுகர்வோர் உறவுகள் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

திருமதி சந்தியானி விஜேசிங்க
நிதி ஒம்புட்ஸ்மன்
முகவரி: இல 01, பெதஸ்டா பிளேஸ், மிலாகிரிய, கொழும்பு 05
நேரடி தொலைபேசி: +94 112595625 பொது தொலைபேசி /தொலைநகல்: +94 112595624
மின்னஞ்சல்: fosril@sltnet.lk வலைத்தளம்: financialombudsman.lk

இலங்கை மத்திய வங்கியின் நிதி நுகர்வோர் உறவுகள் திணைக்களம் (FCRD)
முகவரி: நிதி நுகர்வோர் உறவுகள் திணைக்களம்,
இல. 30, ஜாதிபதி மாவத்தை, கொழும்பு 01.
விசாரணைகளுக்கான துரித இலக்கம்: 1935 தொலைபேசி: +94 112477966
தொலைநகல்: +94 112477444 மின்னஞ்சல்: fcrd@cbsl.lk

Classification: Public